தரம் 10

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## சிறுகதை



அலகு 3

மச்சாள்

MR.J.HARIHARAN (BEd),
K/WESTHALL TAMIL VIDYALAYAM (NATIONAL SCHOOL).

# “தமிழால் வாழ்வோம்”

## உள்ளடக்கம்....

01 சிறுகதை பற்றிய குறிப்பு

02 சிறுகதை ஆசிரியர் பற்றி..

03 கதைக்கரு, கதாப்பாத்திரங்கள், கதைக்களம்

04 கதையின் போக்கு பற்றி..

05 பாத்திரங்களின் குணவியல்புகள்

06 கதாசிரியரின் மொழிநடை பற்றியது.

# “தமிழால் வாழ்வோம்”



அன்பு மாணவர்களே! நாம் இன்று கற்கவிருப்பது மச்சாள் எனும் சிறுகதை. இதுவரை பல கதைகளை படித்திருப்பீர்கள். கதை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை பெற்றிருப்பீர்கள். அதற்கான வழிகள் பற்றி பல வல்லுநர்கள் கூறுவதை சற்றே கேளுங்கள்.

சிறுகதை என்பது இலக்கியத்தின் ஒரு வடிவம். இது ஓர் கலை. கலையினைப் படைப்பது ஒரு படைப்புத்திறன். இதனை ஒருவருக்கும் கற்பிக்க இயலாது. அடுத்தவரிடமிருந்தும் இதனை கற்க இயலாது. அதுதான் படைப்புத்திறன்.

சிறுகதை குறுகிய காலத்தில் படிக்கக் கூடியது. சிறந்த சிறுகதையில் நல்ல கதையம்சம் இருத்தல் வேண்டும். அது ஏதாவது ஒரு நிகழ்வினை மட்டும் விவரிப்பதாக இருக்க வேண்டும். ஓரே மூச்சில் படித்து நிறைவு செய்யக்கூடியதாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு அது தனக்கென தனி பண்பினை கொண்டிருத்தல் அவசியமானதாகும்.

## கதையாசிரியர் பற்றி...

ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களின் முன்னோடி என போற்றப்படுபவர் இலங்கையர்கோன் ஆவார்.

இவர் யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இலங்கை வரலாறு, புராணம், இதிகாச நிகழ்வுகள் சார் விடயங்களை முன்வைத்தே இவரது சிறுகதைகள் ஆக்கப்பட்டன.

இவரின் பதினெட்டாவது வயது, முதல் சிறுகதையாக்கம் எனக் கூறப்படும் **மரியா மதலேனா**, 1938 ஆம் ஆண்டில் கலைமகள் இதழில் வெளியானது. இவர் முப்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை ஆக்கியுள்ளார்.

இவருடைய பதினைந்து சிறுகதைகள் அடங்கிய வெள்ளிப்பாதசரம் எனும் தொகுப்பு நூல் 1962 ஆம் ஆண்டு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

1944 ஆம் ஆண்டில் ஈழகேசரியில் வெளியான வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதை இவரை அடையாளப்படுத்தியது.

1930 களில் தமிழகத்தில் சிறுகதை வளர்ச்சியடைந்த காலத்தில் இலங்கையில் இவர் மற்றும் சி.வைத்தியலிங்கம், க.தி.சம்பந்தன் ஆகிய மூவரும் முக்கியமானவர்களாக கருதப்பட்டனர்.


இவருடைய கதைகள் கதைக்கோவை போன்ற திரட்டுகளில் வெளியாகியுள்ளன.

**கதைக்களம்** : கர்ணகையின் வீடு, மச்சானின் வீடு

**கதாப்பாத்திரங்கள்**: கர்ணகை, சண்முகதாஸனின் தம்பி, அம்மா, சண்முகதாஸ்

**கதைக்கரு**: கர்ணகை எனும் படிப்பறிவில்லாத பெண். அவளுக்கு சண்முகதாஸனை நிச்சயித்து மணமுடிக்க எண்ணியிருக்கின்றார்கள். ஆனால் அவனின் கல்வித் தகைமை அத்திருமணத்திற்கு தடைக்கல்லாக அமைகிறது. பின்னர் வேறொரு படித்த பெண்ணை சண்முதாஸின் வீட்டார் அவனுக்கு திருமணம் செய்து வைக்கின்றார்கள். சிறிது காலத்தின் பின் வீட்டார் கர்ணகையை நினைத்து அவள் வீட்டிற்கு மருமகளாக வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என எண்ணிக் கவலைப்படுவதாக இக்கதைக்கரு காணப்படுகின்றது.





## இக்கதையின் போக்கு

கர்ணகை என்பவள் பற்றி கூறுகையில் அதாவது "ஹெலன், சீதை, கிளியோப்பெட்ரா போன்ற உலக அழகி பற்றி எல்லாம் கேள்விப்பட்டிருக்கின்றேன் என்பதனூடாக இவளின் அழகு அதைவிட மேன்மையானது," என கதையினூடாக அறியமுடிகின்றது. இப்படி அழகு மிக்க அவளுக்கு சண்முகதாஸூடன் திருமணம் நிச்சயிக்கப்படுகின்றது. இதனை சண்முகதாஸின் கடைக்குட்டித் தம்பி அறிவான். அவனின் மனத்தில் பல எண்ணவோட்டங்களும், வரப்போகும் அண்ணி பற்றிய எண்ணங்களும் ஆழப்பதிந்திருக்கின்றன. அவன், கர்ணகை மேல் அளவுகடந்த அன்பும் பாசமும் மிக்கவனாகவும், அண்ணி என்கின்ற கனவுலகில் திளைத்தவனாகவும் இக்கதையில் சித்திரிக்கப்படுகின்றான்.

இவ்வாறிருக்கையில், சண்முகதாஸூக்கு அவனது படிப்புக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதொரு மருமகளை நிச்சயித்து திருமணம் செய்கிறார்கள். அங்கு வரும் மருமகள் ஆங்கில மோகம் உடையவளாக சித்திரிக்கப்படுகின்றாள். இவளை கடைக்குட்டித் தம்பிக்கு பிடிக்கவேயில்லை என இக்கதையாசிரியர் இக்கதையினூடாக குறிப்பிடுகின்றார்.

ஆகவே, அவள் மீது அவனின் வெறுப்பு கதையில் சித்திரிக்கப்படுகின்றது. ஆயினும், கடைக்குட்டித் தம்பி தாயின் இச்செய்கையினால் தாய் மீதும் கோபமுடையவனாக கூறப்படுகின்றான். ஆனால், கர்ணகை என்கின்ற மச்சாள் அவனுக்கு கதையின் இறுதி வரைக்கும் ஓர் அரசியாகவே காணப்படுகின்றாள். காரணம் அவள் மீது அவனுக்கு இருக்கும் அன்பும் பாசமும் எதிர்ப்பார்க்கையுமே ஆகும். அவளும் அவன் மீது இனம் புரியாத அன்பினை செலுத்துபவளாக கதையில் ஆசிரியரால் சித்திரிக்கப்படுகின்றாள். இவ்வாறு நாட்கள் பல கழிகின்றன. அம்மாவுக்கு வந்த மருமகளின் போக்கு பிடிக்கவில்லை. அச்சந்தர்ப்பத்தில் “நீ கோவிக்கிறது சரியடா மேனே! உன்ரை கர்ணகை மச்சாள் இந்த வீட்டுக்கு வந்திருக்க வேணும். அந்த நேரம் என்ரை புத்தி மத்திமமாய்ப் போச்சு! அவள் வந்திருந்தால் இந்த வீட்டுக்கு ஒரு மகாலட்சுமி…”

“நான் பொங்கித் துளித்த கண்ணீரை அடக்க முயன்றபடி புத்தகத்தின் பக்கங்களை ஒரு பைத்தியகாரன் போல் புரட்டிக் கொண்டிருந்தேன்…” என கதை நகர்கின்றது.





அம்மாவின் இந்நினைவு இவ்வாறு இருக்க, கர்ணகைக்கு வேறு கல்யாணம் பேசி கல்யாணம் நடைபெற ஆயத்தமாகி விட்டது என கதை ஓட்டம் நகர்கின்றது. இப்படியாக இக்கதை கர்ணகைக்கு திருமணம் நடந்தேறுவதாகவும் ஆயினும், அவளின் அன்பு கடைக்குட்டி மச்சான் மீது குறையாமல் இருப்பதனையும் பின்வரும் கூற்றுக்களின் ஊடாக அறியலாம்.

“இரடா மச்சான் நல்லாய் வயிறு முட்டத் தின்னன்ரா!” எனக் கர்ணகை கூறுவதாகவும்,

அவளைக் கேலி செய்ய வேண்டும் என்று, “என்ன மச்சாள், ராத்திரி மணவறையிலை கூறைச் சீலையும் உடுத்த நகை எல்லாம் போட்டுத் தலையைக் குனிஞ்சு கொண்டு இருந்தீரே! அப்ப இந்த வாய் எல்லாம் எங்க போச்சுது?”

“போடா குரங்கே, சனியன், மூதேசி!”

அவள் கண்கள் பளபளக்கும் வைரத்தில் பதிந்துவிட்ட மரகதங்கள் போல மின்னின கண்ணீர்....” ஆனால், அரசிகள் அழுவதில்லையே! என கதை நிறைவடைகின்றது.

# “தமிழால் வாழ்வோம்”

இச்சிறுகதையில் வரும் கதாபாத்திரங்களின் குணவியல்புகள்..

## கர்ணகையின் குணவியல்புகள்

- அன்பு பாராட்டக் கூடியவள்
- தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தவள்.
- சண்முகதாஸ் மீது மதிப்பு மிக்கவள்.
- படிப்பறிவு இல்லாதவள் ஆனாலும் பண்பானவள்.
- பெரியோர்களை மதித்து நடப்பவள் மற்றும் மரியாதையானவள்.
- சிறுவனான சண்முகதாஸின் தம்பி மீது அளவு கடந்த பாசமும் அன்பும் மிக்கவள்.

சண்முகதாஸின் தம்பியின் குணவியல்புகள்

அண்ணியுடன் பேச விருப்பமில்லாதவன். காரணம், அவள் ஆங்கில மோகம் கொண்டவள் ஆதலால்.

தனது அம்மாவின் செயற்பாட்டை எண்ணி அவள் மீது கோபமடைந்தவன்.

கர்ணகை மீது அன்புடையவன்.

அண்ணனின் மனைவி மீது வெறுப்பு காட்டியவன்.

கர்ணகை என்பவள் தனது அண்ணியாக வரப்போகின்றவள் என்ற எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்து ஏமாற்றமடைந்தவன்.

அம்மா பண மோகம் மற்றும் கல்வி அறிவின் மீது மோகம் உடையவளாக இருக்கிறாள்.

மருமகளின் செயற்பாடுகளை அறிந்த பின் வேதனைப்படுபவளாக சித்திரிக்கப்படுகின்றாள்.

படிப்பறிவுள்ள தன் மகனுக்கு படித்த மருமகளை தேடியவள்.

இறுதியில் கர்ணகை தனக்கு மருமகளாக வந்திருக்கலாம் என எண்ணி ஏங்குபவள்.

## சண்முகதாஸின் அம்மாவின் குணவியல்புகள்

சண்முகதாஸின் குணவியல்புகள்

அம்மா சொற்படி கேட்டு நடப்பவன்.

இவன் அடுத்த ஊரில் ஆசிரியராக தொழில் புரிபவன்.

சண்முகதாஸ் படிப்பறிவு மிக்கவன்.

## கதாசிரியரின் மொழிநடை

- எளிமையான சொல்லாட்சி - வடஇலங்கை பிரதேச மொழி கையாள்கை. எல்லா வாசகர்களையும் ஈர்க்கும் சுவாரசியமான நடை.
- கதைக்குத் தேவையான உவமைத்தொடர்கள், உவமையணி மற்றும் உருவகங்கள் கையாண்டுள்ளமை.
- நியமமொழியில் கதை எழுதப்பட்டிருப்பினும் தன் கதைக்கு தேவையான அளவு பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்தி இருத்தல்.
- நகைச்சுவை பாங்கிலான மொழிச் சொற்கள்.
- விறுவிறுப்பான கதையோட்டம்.
- எதிர்ப்பார்ப்பைத் தூண்டும் விதத்தில் கதை கூறப்பட்டுள்ள விதம்.

## பயிற்சி:

1. இச்சிறுகதையின் மையக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு கூறுக.
2. இக்கதையில் நீர் இரசித்த பகுதியினைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தை எழுதுக.
3. இச்சிறுகதை தலைப்பின் பொருத்தப்பாட்டை தெளிவுபடுத்துக.
4. கர்ணகையின் அழகு எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?
5. இக்கதையில் வரும் பிரதான பாத்திரங்கள் மூன்றினைத் தருக.

# “தமிழால் வாழ்வோம்”

மாணவர்களே! உங்களின் மேலதிக சுயமதிப்பீட்டிற்கு கீழுள்ள லிங்கினை அழுத்தி மதிப்பீட்டினை மேற்கொள்ளவும்.

https://docs.google.com/forms/d/1jAhNHLNaZ73-06VdXR4qGKrHA-GScYO0rLMub5NgjZU/editSlide 12

# நன்றி